பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
03 02 2026 12 40
செவ்வாய்கிழமை நண்பகல்
<u>ஆகாஷவாணி செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரி குறைப்பு நடவடிக்கை உற்பத்திக்கான இந்தியா இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

- இந்தியா – அமெரிக்கா இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குறிப்பிட்டுள்ளார்.

- மகளிர் மற்றும் குழந்தைகளின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திருமதி சாவித்திரி தாக்கூர் தெரிவித்துள்ளார்.

- பட்ஜெட்டில் ஆயுஷ் துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

- பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் தேவிகா சிகாக் 48 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

---இனி விரிவான செய்திகள்---

இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரி குறைப்பு நடவடிக்கை உற்பத்திக்கான இந்தியா இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய பொருட்களுக்கான இறக்குமதி வரி 18 சதவீதமாக குறைக்கப்பட்டதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் டிரம்புக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகள் இருபெரும் ஜனநாயக நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு பயனளிக்கும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

>>><><><<<

*இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் பொருளாதார உறவுகளை மேம்படுத்த உதவிடும் என்று மத்திய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய பொருட்கள் மீதான இறக்குமதி வரி 18 சதவீதமாக குறைக்கப்பட்டு இருப்பது, புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்க உதவிடும் என்று கூறியுள்ளார்.*

*இந்த ஒப்பந்தம் இருதரப்பு வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு வலுசேர்க்கும் என்று திரு நிதின் கட்கரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

>>><><><<<

*இந்தியா – அமெரிக்கா இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.*

*இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சிறு-குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், இளையோர், விவசாயிகள் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் இது பெரிதும் பயனளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பை உயர்த்தியுள்ளதாகவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.*

>>><><><<<

*இந்தியா – அமெரிக்கா இடையேயான வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தம் இருபெரும் ஜனநாயக நாடுகளுக்கு இடையேயான பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் என்று அகில இந்திய வர்த்தக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.*

*தற்சார்பு, நம்பிக்கை மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு இதுபோன்ற*

நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் திரு பிரவீன் கந்தேல்வால் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த ஒப்பந்தம் இருதரப்பு வர்த்தகம், முதலீடு, வேலைவாய்ப்பு உருவாக்கம், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு உதவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி மற்றும் நலன் சார்ந்த நடவடிக்கைகள் இந்தியாவை உலகின் பெரிய பொருளாதார நாடாக நிலைநிறுத்தும் என்று திரு பிரவீன் கந்தேல்வால் கூறியுள்ளார்.

>>><><><><<<

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளது என்று இந்திய ஏற்றுமதியாளர் சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் திரு *Ralhan* வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஒப்பந்தம் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு அமெரிக்க சந்தையில் போட்டித்தன்மையை உருவாக்க உதவிடும் என்று தெரிவித்துள்ளார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகளுக்கு இது உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

பொறியியல் பொருட்கள், ஜவுளி, மருந்துகள், ரசாயனங்கள், தோல் பொருட்கள், செயற்கை கற்கள் மற்றும் வேளாண் விளைபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் உதவிடும் என்று திரு *Ralhan* தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரி குறைப்பு நடவடிக்கை அரிசி ஏற்றுமதிக்கு ஊக்கமளிக்கும் என்று இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பும் தெரிவித்துள்ளது.

>>><><><><<<

*தேசிய ஜனநாயக கூட்டணி தொடர்ந்து தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அரசின் சிறந்த பொருளாதார கொள்கைகள் மற்றும் கட்சித் தொண்டர்களின் அயராத களப் பணி ஆகியவை முக்கிய காரணங்களாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் இன்று நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் வெற்றிகள் அர்ப்பணிப்புடன் மக்கள் பணியாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடியின் வழிகாட்டுதல்படி 39 வளர்ச்சியடைந்த நாடுகளுடன் இந்தியா மேற்கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தம் அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும் என்று திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.*

*>>><><><<<*

*குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஒடிசா மாநிலம் ஜட்ஜ்பூர் மாவட்டத்தில் உள்ள மாதா பிரஜா கோயிலில் இன்று சாமி தரிசனம் செய்தார்.*

*இதனையொட்டி, அந்த நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பள்ளிகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மூடப்பட்டு இருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*குடியரசுத் தலைவரின் வருகையையொட்டி, விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.*

*>>><><><<<*

*மக்களவை இன்று பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.*

*குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது.*

*இதனையடுத்து, கேள்வி நேரத்தின் போது உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய், உறுப்பினரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்க முயன்றபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.*

*பின்னர் அவை கூடிய போதும் தொடர்ந்து அமளி நீடித்ததால் பிற்பகல் 2 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.*

>>><><><<<

மும்பை – அகமதாபாத் இடையேயான புல்லட் ரயில் வழித்தடம் அமைக்கும் பணிகளின் ஒருபகுதியாக மலைப் பகுதியை குடைந்து பாதை அமைக்கும் திட்டப் பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவின் முதலாவது அதிவிரைவு ரயில் திட்டப் பணிகளை ஒட்டுமொத்த உலக நாடுகளும் உன்னிப்பாக கவனித்து வருவதாக கூறினார்.

புல்லட் ரயில் திட்டப் பணிகள் திட்டமிட்டபடி நடைபெற்று வருவதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

>>><><><<<

மகளிர் மற்றும் குழந்தைகளின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திருமதி சாவித்திரி தாக்கூர் தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் உள்ள ஐநா தலைமையகத்தில் நடைபெற்ற சமூக மேம்பாட்டு ஆணையத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், ஊட்டச்சத்து, சுகாதாரம், கல்வி, சமூக பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களை கருத்தில் கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டும் வகையில், நீண்டகால சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கொள்கை அடிப்படையில், அரசின் சமூக நலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாக திருமதி சாவித்திரி தாக்கூர் கூறினார்.

>>><><><<<

மத்திய பட்ஜெட்டில் ஆயுஷ் துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 3 அகில இந்தியா ஆயுர்வேத மையங்கள் அமைக்கப்படும், ஆயுஷ் மருந்தகங்கள் மற்றும் பரிசோதனை மையங்கள் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்படும் போன்ற அறிவிப்புகள் நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு வெளியிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

>>><><><<<

மேற்கு வங்க மாநிலம் துர்காபூரில் தொழிலதிபருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்க இயக்குநரக அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

நிலக்கரி கடத்தல் வழக்கு தொடர்பாக இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமலாக்கத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

>>><><><<<

இந்தியா-அமெரிக்கா நாடுகளுக்கு இடையேயான நட்புறவு மேம்படுவதன் மூலம் ஏராளமான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதர் திரு Sergio Gor தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ஒப்பந்தம் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>><><><<<

விளையாட்டுச் செய்திகள்

பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் தேவிகா சிகாக் 48 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் பட்டம் வென்றதன் மூலம் 15 இடங்கள் அவர் முன்னேறியுள்ளார்.

***-------------***

***ஆசிய பேட்மிண்டன் குழு சாம்பியன் போட்டி சீனாவில் இன்று தொடங்கியது.***

***--------------***

***சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.***

***>>> End of News <<<***